ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 2 ■ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

3.085 IMPACT FACTOR
JOURNAL WITH
SJI TAMIL STUDIES

**மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
விரகனூர், மதுரை

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
மதுரை

இணைந்து நடத்தும்

**தொகுதி – 2**

பன்னாட்டுக் கருத்தரங்கம்




08.02.2019

**பதிப்பாசிரியர்கள்**

திருமதி. சே.சலோமி இிராஜரிகம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019
Shanlax International Journal of Tamil Studies
A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி.சே.சலோமி இராஜரீகம்<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்<br>முனைவர் இரா.ஏஞ்சல்<br>முனைவர் கோ.கருணாகரன்<br>முனைவர் செ.அன்புராணி<br>திருமதி ஜோ.சகாய பவுலின் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி, 2019 |
| வெளியீடு | : | மெடோனா பெண்கள் கலை மற்றும்<br>அறிவியல் கல்லூரி<br>விரகனூர், மதுரை - 625 009. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 179 |

**ISSN : 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்**

# அநுத்தமா நாவல்களின் பெண்களின் திறன்

**ச.இலக்கியா**
தமிழ்த்துறை, உதவிப்பேராசியர், புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

மலர்: 3
சிறப்பிதழ்: 2
மாதம்: பிப்ரவரி
வருடம்: 2019
ISSN: 2454-3993

நிலவுடைமை காலகட்டம் தோன்றிய பின் உடைமை வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு குடும்பம் ஆகும். ஒரு குடும்பம் முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு உதவியாக இருப்பவள் பெண். பெண் என்பவள் மிகவும் முக்கியமானவள் பெண் நாட்டிற்கும், வீட்டிற்கும் விடிவெள்ளியாகவும், ஒளிவிளக்காகவும் திகழ்பவள். அவளின் பங்கும், பணியும், திறமையும், இச்சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சந்ததிகள் வளர்வதற்கு உறுதுணையாக இருப்பவள் பெண்ணே ஆவாள். கணவனையும், குழந்தைகளையும் வீட்டையும் பாராமரிக்க வேண்டிய கடமை பெண்ணுக்குரியது என்பதை சங்ககாலம் வரையறைச் செய்கிறது.

**"..................... வான்நுதல்**
**மனையுறை மகளிர்க் கவ்வாடவர் உயிரே" (குறுந்:135)**

என்னும் குறுந்தொகைப்பாடல் எடுத்தியம்புகிறது. பெண் என்பவள் தன் கடமையைச் செய்து இல்லறவாழ்வில் திறமையுடையவளாய் விளங்குகிறாள். அவ்வாறு திறமையுடன் விளங்கும் பெண்ணின் முக்கியத்துவமும் ஒரு குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய கடைமையும், பொறுப்பும், சேவையும், பங்களிப்பும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை அறிந்து கொள்ளுவதே இவ்வாய்விற்குரிய வழித்தடமாக அமைகிறது.

## குடும்பத்தில் பெண்ணின் முக்கியத்துவம்

குடும்பத்திற்கோ அல்லது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கோ ஒரு பெண்ணின் தேவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஒரு பெண் என்பவள் குடும்பத்தை பொறுத்தவரை வீட்டைச் சுத்தம் செய்து அழகுப்படுத்திப் பராமரிப்பவளாகவும், கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்பவளாகவும், குழந்தைகளுக்கு வேண்டியதை, அவர்கள் விரும்புவதை செய்து தருபவளாகவும், குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் தானே முன்நின்று செய்து கொடுப்பவளாகவும் இருக்கிறாள். பூஜை அறையை சுத்தம் செய்து தினமும் மாலை நேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்கிறாள். காலை எழுந்தது முதல் இரவு உறங்கச் செல்லப் போகும் வரை அனைத்து வேலைகளையும் அவள் ஒருத்தியாக நின்று செய்யும் திறன் கொண்டவளாக திகழ்கிறாள்.

இதனை அநுத்தமா அவர்கள், தம் நாவல்களில் மூலம் ஒரு குடும்பத்திற்குப் பெண்ணின் பங்கும், அவளின் தேவையும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஆசிரியர் அவர்கள் பெண் கதாபாத்திரத்தின் மூலம் இந்த உலகிற்கு எடுத்துரைக்கிறார். அதனை பின்வரும் நிகழ்வுகளின் மூலம் அறியாலாம்:-

**பெண்ணின் பங்களிப்பு**

ஒரு குடும்பத்தில் பெண்ணின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. ஒவ்வொரு செயலிலும் பெண்ணின் பங்கு உள்ளது. குடும்ப முன்னேற்றத்திலும் கணவனின் வெற்றியிலும் ஒரு பெண்ணின் பங்களிப்பு உள்ளது. வள்ளியின் கணவனாகிய குமார் ஊருக்குச் செல்லும் முன்பு அவளுக்குப் பணித்தது.

**"நான் டெல்லிக்குப் போய்விட்டுத் திரும்பி வர ஒரு வாரம் ஆகும் வீட்டை நன்றாக கவனிச்சுக்கோ. இப்பதான் உன் திறமை தெரியப் போகுது" – (2)**

என்றான் குமார். தன் மனைவியின் திறமையைப் புரிந்த ஒரு கணவனாகவும் செயல்படுகிறான். அவளது திறமைக்கு மெருகூட்டுகிறான். அவனது எண்ணித்திற்கேற்ப வள்ளியும் திறம்படச் செயல்படுவளாகவே திகழ்வதையும் காண முடிகிறது.

இவ்வாறாக குமார் தன் மனைவியிடம் வீட்டையும், வீட்டில் உள்ளவர்களையும் நன்றாகக் கவனித்துக் கொள்ளும்படியும், தான் ஊரில் இல்லாதபோது தைரியமாக இருந்து தலைமை வகிக்கும் படியும் கூறினான். அவளும் அதனைக் கேட்டுக் கொண்டு வீட்டையும் வீட்டில் உள்ளவர்களையும் நன்றாக கவனித்துக் கொண்டாள். வீட்டை நன்கு பாரமரித்து வழி நடத்தினாள். தன் கணவன் பணித்த வேலைகளைத் திறம்பட செய்பவளாகவும் வள்ளி திகழ்கிறாள்.

**பெண்ணின் பணி**

ஒவ்வொரு பெண்களும் தங்கள் பணிகளை திறம்பட செய்பவர்களாகவே இருக்கின்றனர். காலங்காலமாக பெண்கள் தங்கள் பணியிலிருந்து சிறிதும் தவறியதில்லை எப்பொழுதும் இடைவிடாது தங்கள் பணிகளை செய்பவர்களாகவே இருக்கின்றனர்.

**"மானிடர்களின் காலம் தொட்டு", உலகின் ஒவ்வொரு பகுதிகளும் ஒவ்வொரு வகையான சமுதாயத்திலும் எல்லா இடங்களிலும் எப்போதும் இடைவிடாதும் தொடர்ச்சியாகவும் பணியாற்றியுள்ளனர் - (3)**

இவ்வறாக, பெண்கள் ஒவ்வொருவரும் குடும்பத்திற்காக மட்டும் பணியாற்றாமல் வெளியிடங்களிலும் பணியாற்றியுள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் பணி செய்துள்ளனர் என்பதை அநுத்தமா நாவாலான கேட்ட வரம் குறிப்பிடுகிறது.

**"தன் இடுப்பிலிருந்து ஜலக்குடத்தை பஜனை மடத்துச் சாப்பாட்டு விடுதியில் கொண்டு கொடுத்துவிட்டு, வேகமாக சென்று தாங்கள் இறங்கியிருந்த இடமாகிய வீட்டினுள் நுழைந்தாள் ருக்மணி" - (4)**

இவ்வாறாக, பெண்கள் தங்கள் வீட்டிற்காக மட்டுமே இல்லாமல் பொதுவாழ்விலும் ஈடுபட்டுள்ளனர் என்பது இதன் மூலம் புலனாகிறது. இறைவனுக்கு செய்யவேண்டிய பணிகளையும் தவறாது செய்து வந்தனர். பெண்கள் சமையலில் மட்டும் கைத்தேர்ந்தவர்கள் இல்லை மற்ற எல்லா திறன்களிலும், கலைகளிலும் கைத்தேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர் என்பதனை அநுத்தமா அவர்கள் தன் நாவலில் சுட்டிக் காட்டுகிறார்.

**பெண்களின் தேவை**

ஒவ்வொரு வீட்டிற்கு பெண்களின் தேவை மிகவும் அவசியமாக உள்ளது. "பெண்ணில்லாத வீடு வாளி இல்லாத கிணறு மாதிரி" என்ற பழமொழிக்கேற்ப பெண்ணின் தேவை அவசியமாகிறது. ஏனென்றால் கிணறுக்கு வாளி இல்லையென்றால் எவ்வாறு தண்ணீர் கிடைக்காதோ அதுபோல் ஒரு வீட்டிற்கு பெண் இல்லை என்றால் எந்த ஒரு செயலும் நடக்காது என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் அநுத்தமா தன் நாவலின் ஒரு நிகழ்வை குறிப்பிடுகிறார்.

**"மாலா, வீட்டைக் கொஞ்சம் கவனிக்கமாட்டியா? பாட்டிரும் நாறுது, பாலு உதைச்சிக்கிறான், கண்ணம்மா பாட்டிக்குத் தலைச் சுற்றலாம். நீயும் நாளைக்கு ஒரு வீட்டிலே போய்க் குடுத்தனம் செய்ய வேண்டியவதானே? என்று அவளைக் கோபமாகக் கேட்டான்" - (5)**

இவ்வாறாக, குமார் தன் மருமகளான மாலாவைக் கடிந்துக் கொண்டான். ஒரு குடும்பத்திற்கு தலைவியாக உள்ள வள்ளி என்ற பெண் இல்லையென்றால் அந்த குடும்பத்தில் எந்த ஒரு செயலும் நடக்காது என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதுமட்டும், இன்றி மிகவும் சிறிய பெண், பக்குவமடையாத

பெண்ணால் ஒரு செயலை திறம்பட செய்ய இயலாது என்பதனை ஆசிரியர் தன் நாவலின் வழி எடுத்துரைக்கிறார். இந்த இடத்தில் ஒரு பெண்ணின் அவசியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை அறிய முடிகிறது.

**குடும்ப உறுப்பினர்களும் பெண்களின் கடமையும்**

பெண்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்காகப் பணிவிடை செய்வதையே தங்கள் கடமையாக எண்ணி வாழ்பவர்கள். தன் கணவனுக்கும், குழந்தைகளுக்கும், மாமியாருக்கும், மாமனாருக்கும், நாத்தனாருக்கும், கொழுந்தனாருக்கும் செய்ய வேண்டிய அனைத்துக் காரியங்களையும் திறம்பட செய்யும் ஆற்றல் உடையவர்கள் பெண்கள். தன் கணவனோ, குழந்தையோ, மாமியாரோ, யாரேனும் உடல்நிலை சரியில்லாத போது அவர்களை அரவணைத்து பார்த்துக் கொள்பவள்.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" - (6)**

தென் புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன் குடும்பம் என்னும் ஐந்திடத்தும் அறநெறி பேணுதல் இல்லறத்தானுடைய சிறந்த கடமையாகும்.

குழந்தைகளை நன்கு வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு பெண்ணிற்கு உண்டு. ஒழுக்கத்துடனும், நல்ல கல்வியறிவுடன், நற்பண்புகளுடனும் வளர்க்கும் பொறுப்பு பெண்ணுக்குரியது. கணவனை நல்வழிப்படுத்தி அவன் வளர்ச்சிக்கு ஒரு ஏணிப்படியாக இருக்கும் கடமையும் ஒரு பெண்ணிற்கு உண்டு.

**நிறைவாக**

பெண்கள் பொதுவாக மிகவும் மென்மையானவர்கள் குடும்பத்தை நல்ல முறையில் வழி நடத்தி செல்வதில் ஆற்றல் மிக்கவர்கள்.

"ஒரு பெண்ணின் யாத்திரை சமையலறையிலிருந்து வாயிற்படிவரை" என்ற பழமொழிக்கு ஏற்ப பெண்கள் வாழ்கின்றனர். கட்டுப்பாடுகளோடு வாழ்பவர்கள் பெண்கள். பெண்கள் குடும்ப வேலையில் மட்டும் சிறந்து விளங்காமல், குடும்பப் பணிப்போக மற்ற நேரங்களில் கலைகளையும் கற்று அதிலும் சிறந்து விளங்கினர். ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு ஆண்களுக்கு உண்டென்றாலும் அதிகப்படியானப் பொறுப்புகள் எல்லாம் பெண்களுக்கே உண்டு.

இவ்வாறாக, பெண்கள் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய அனைத்து காரியங்களையும் செய்து அதில் முக்கிய பங்கு வகிப்பவர்களாகத் திகழ்கின்றனர் என்பதும் இவரது நாவல் முழுவதும் பெண்களையே மையமிட்டும், உயர்த்தியும் அவர்களின் கடமையும், பொறுப்புணர்வையுமே சிறப்பித்துக் சொல்கின்ற போக்கினை அநுத்தமா நாவல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

1. வாசுகி, ஜெயரத்னம், பெண்ணியச்சுவடுகள், ப.164.
2. அநுத்தமா, துரத்தும் நிழல்கள், ப. 52
3. வி.இராதகிருஷ்ணர், உலக வரலாற்றில் பெண்கள். ப.225
4. அநுத்தமா, கேட்டவரம். ப.54
5. அநுத்தமா, துரத்தும் நிழல்கள் ப.170
6. எம்.நாராயணவேலுப்பிள்ளை (உ.ஆ)., திருக்குறள் மூலமும் எளிய தமிழில் உரையும், ப.15.